<u>செய்தி வெளியீடு எண்.571</u> <u>நாள்.6.9.2007</u>

மணல் விற்பனை

பாலாற்றில் அரசு அனுமதியின்றி குவாரிக்கு வெளியில் மணல் எடுப்பதாகவும், லாரி வரும் வழியில் ரூ 50/- அல்லது ரூ 100/- என பணம் வசூலிப்பதாகவும் ஒரு சில தினசரிகளில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாலாற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெரியநத்தம் மற்றும் பழையசீவரம் கிராமங்களிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் செட்டிதாங்கல் கிராமத்திலும் மணல் குவாரிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. பொதுப்பணித்துறை மூலமாக 2 யூனிட் மணலுக்கு ரூ 624/- டி.டி பெற்றுக் கொண்டு லாரிக்கு ரசீது வழங்கப்படுகிறது. லாரி உரிமையாளர்கள் வங்கியின் மூலமாக டி.டி. பெற்றுவர கடுமையாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஆற்றிலுள்ள குவாரிகளுக்கு லாரிகள் வருவதற்கு ஏதுவாகஆற்றில் தற்காலிகமாக சாலை அமைக்கப்பட்டுள்ளது. லாரிகள் வரும் வழியில் மணல் எடுக்க அனுமதிக்கப்படாத சில இடங்களில் உள்ளுர் மக்கள் சிலரால் தன்னிச்சையாக லாரிகளில் மணல் ஏற்றுவதைத் தடுக்க வருவாய்துறை, காவல் துறை மற்றும் பொதுப்பணித்துறை மூலமாக நடவடிக்கை எடுத்து இத்தகைய தேவையற்ற செயல்கள் குறைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களும், தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். பொது மக்களும், மேற்படி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திருட்டு மணல் எடுப்பதை வருவாய் துறை மற்றும் காவல்துறை மூலமாக திடீர் சோதனை நடத்தி தடுக்கப்பட்டு வருகிறது. இதனால் கட்டுமானப் பணிகளின் வளர்ச்சி மற்றும் தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு சென்னை நகர மணல் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தேவையான அளவிற்கு சென்னை மற்றும் புற நகர் பகுதிகளில் மணல் கிடைப்பதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9